ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1957/30 - 2016 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2016.03.11

*1957/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**சபரகமுவ மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா நியதிச் சட்டம்*

*2016.02.16 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் கௌரவ தவிசாளர் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*2016.01.23 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதி அளிக்கப்பட்டது.*

*சபரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா நியதிச் சட்டம்*

*2016.02.09 ஆந் திகதி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2016.02.23 ஆந் திகதி சபரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்ட சபரகமுவ மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா நியதிச் சட்டம் அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.*

பாலித நாணயக்கார,
சபைச் செயலாளர்,
சபரகமுவ மாகாண மாகாண சபை.

*சபரகமுவ மாகாண மாகாண சபை,*
*2016, பெப்புருவரி 3.*

சபரகமுவ மாகாணத்தின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா நிர்மாணிப்பது தொடர்பான நியதிச்சட்ட வரைவு

**சபரகமுவ மாகாணத்தின் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்காவை நிறுவுதல் தொடர்பான நியதிச்சட்டம்**

வரலாற்றுக்கு முற்பட்ட கால யுகத்துக்கு உரிமைகோருகின்ற சபரகமுவ மாகாணத்தில் காணப்பட்ட மிகப் புராதன கிராமியப் பொருளாதார, கலாச்சாரம் உட்பட கல்வி தொடர்பான உரிமைகள் மற்றும் சுபீட்சமான எதிர்கால சந்ததியைக் கண்டுகொள்வதற்காக தொனிப்பொருள் பூங்கா ஒன்றை நிறுவுதல் மற்றும் அதனுடன் தொடர்பான பொறுப்புச் சபை அல்லது அதனுடன் தொடர்பான தொடர்ச்சியான விடயங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கான நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாண மாகாண சபை மூலம் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

*நடைமுறைப்படுத்தல் மற்றும் குறுகிய நாமம்.*

(1) 1.1. இந்நியதிச்சட்டம் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க "பின்னவல இபெரனிகம" தொனிப்பொருள் பூங்கா என அழைக்கப்படுகின்ற அதேவேளை, சபரகமுவ மாகாண மாகாண சபை ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

1.2. இதன் பிறகு தொனிப்பொருள் பூங்கா என "பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா" என பொருள் கொள்ளப்படும் அதேவேளை இங்கு 4 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்படுபவர்கள் பொறுப்புச் சபையின் அங்கத்தவர்களாக கருதப்பட வேண்டும்.

1.3. ''பின்னவல இபெரனிகம'' தொனிப்பொருள் பூங்கா சபரகமுவ மாகாண பிரதான அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு அலகாகக் கருதப்படும் அதேவேளை, அதற்கு சிறந்த இருப்பும், பொது முத்திரையும் காணப்பட வேண்டும்.

1.4. இங்கு "அமைச்சர்" எனக் குறிப்பிடப்படுவது சபரகமுவ மாகாண முதலமைச்சராவார்.

1.5. பொறுப்புச் சபை என "பின்னவல இபெரனிகம பொறுப்புச் சபை குறிப்பிடப்படும்.

1.6. ''கணக்கு'' என பின்னவல இபெரனிகம'' தொனிப்பொருள் பூங்காவுக்குரிய கணக்கு குறிப்பிடப்படும்.

1.7. "ஆளுநர்" என சபரகமுவ மாகாண சபையின் ஆளுநர் கருதப்படுவார்.

1.8. ''செயலாளர்'' என சபரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சின் செயலாளர் கருதப்படுவார்.

*தொனிப்பொருள் பூங்கா கீழ்வரும் இலக்குகளை அடைந்து கொள் வதற்காக நிறுவப் படுகின்றது.*

(2) 2.1. வரலாற்றுக்கு முற்பட்ட கால யுகத்துக்கு உரிமைகோருகின்ற சபரகமுவ மாகாண மிகப் பண்டைய கிராமமொன்றின் பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகளை எதிர்காலச் சந்ததியினருக்கு பார்க்கக்கூடியதாக நேரடியாக மற்றும் நிர்மாணங்களூடாக முன்வைத்தல்.

2. 2. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த (சா/தர), ( உ/தர.) மற்றும் உயர் கல்வியைத் தொடர்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு பண்டைய கிராமமொன்று உருவாகிய அமைப்பு, அங்கு காணப்பட்ட மாதிரிகள் மற்றும் உபகரணங்கள் என்னவென்பது தொடர்பாக கற்பதற்கு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்தல்.

2.3. பண்டைய கிராமமொன்றின் பொருளாதார முறை தொடர்பாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

2.4. பண்டைய கிராமமொன்றில் காணப்பட்ட அம்சங்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்களை எதிர்கால சந்ததியினருக்கு பார்க்கக்கூடிய வகையில் பாதுகாத்தல்.

2.5. மாகாணத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை முன்னேற்றுதல்.

2.6. தொனிப்பொருள் பூங்காவின் மூலம் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.

2.7. வெளிநாட்டு சுற்றுலா கவர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் அதனூடாக வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளுதல்.

2.8. திருமண நிகழ்வுகள், பல்வேறு நாடக மற்றும் திரைப்பட படப்பிடிப்புகள் விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற சந்தர்ப்பங்களுக்காக பௌதீக மற்றும் சுற்றாடல் ரீதியாக உகந்த இடமொன்றை அமைத்துக் கொடுத்தல்.

2.9. சபரகமுவ கலைப்படைப்பாளர்களின் கலைத் திறமைகள் மற்றும் படைப்புக்களை மேற்கொள்ளல், அவற்றை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பத்தை அமைத்துக் கொடுத்தல்.

2.10. சபரகமுவ மாகாண கலைஞர்களின் நடன ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.

2.11. எதிர்கால உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் மற்றும் கலைச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்.

2.12. மாகாண நிதியத்துக்கு வருமானம் வருவதற்கானம் வழிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்.

(3) 3.1. தொனிப்பொருள் பூங்கா, இலங்கையில் சபரகமுவ மாகாணத்தில் சம்பிரதாயமான பண்டைய கிராமமொன்றில் காணப்பட்ட அம்சங்களை வெளிக்காட்டுகின்ற நிர்மாணங்களை உள்ளடக்கியதாக காணப்பட வேண்டும். தொனிப் பொருள் பூங்காவின் பகுதிகள்.

3. 2. இவை நிர்மாணங்களாக நாட்டு வைத்தியர் வீடு, ஆரச்சி வீடு, கோப்பிக் கடை, கம்மலை, தச்சுப் பட்டறை, கை இயந்திரம், புடவை இல்லம், குளவிக்கூடு, பெரிய கமராலவின் வீடு, குளம், பயிர் நிலம், தேன்கூடு, மர மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடு, வயல்வெளி, சூட்டுக்களம், நெற்களஞ்சியம், விகாரை, திறந்த வெளி அரங்கு, பேரிகை தவுள் வீடு, ஆசிரியர் இல்லம், வண்ணாரப் பெண்ணின் வீடு, பண்டைய கிராம உணவகம், நுழைவாயில், வெளிவாயில், நினைவுச்சின்ன விற்பனைக் கடை என்பன கருத்தில் கொள்ளப்படும்.

3.3. தொனிப்பொருள் பூங்காவின் நோக்கங்களை மீறாத வகையில் புது விடயங்களை சேர்க்கும் அதிகாரம் பொறுப்புச் சபைக்கு உண்டு.

(4) 4.1. பொறுப்புச் சபையின் அமைப்பு கீழ்வருபவர்களைக் கொண்டு அமைந்திருக்கும். பொறுப்புச் சபையின் அமைப்பு.

பிரதான ஆலோசகர் - சபரகமுவ மாகாண பிரதான அமைச்சர்.

கருதுகோள் ஆலோசகர் - பிரதான செயலாளர், சபரகமுவ மாகாண மாகாண சபை.

தலைவராக பிரதான அமைச்சின் செயலாளர் விளங்குவார். இதன் உறுப்பினர்களாக பின்வருவோர் செயற்படுவர்.

- முதலமைச்சரின் பிரதிநிதிகள் இருவர்
- செயலாளர், சபரகமுவ மாகாண கல்வி அமைச்சு
- செயலாளர், சபரகமுவ மாகாண சுற்றுலா அமைச்சு
- செயலாளர், சபரகமுவ மாகாண கைத்தொழில் அமைச்சு
- செயலாளர், சபரகமுவ மாகாண விவசாய அமைச்சு
- பிரதிப் பிரதான செயலாளர் (தீட்டமிடல்)
- பிரதிப் பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்)
- பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்)
- பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்)
- பிரதிப் பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி)
- சபரகமுவ மாகாண பிரதான அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்)
- சபரகமுவ மாகாண பிரதான செயலாளரினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர்.

மேற்குறிப்பிட்ட 13 உத்தியோகத்தர்களைக் கொண்டதாக இப் பொறுப்புச் சபை அமைந்திருக்கும்.

இப்பொறுப்புச் சபையுடன் தொடர்பான நியமனங்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்படும்.

பொறுப்புச் சபையின் பதவிக்காலம் மற்றும் பொறுப்புக்கள்.

(5) 5.1. பொறுப்புச் சபையின் பதவிக்காலம் 3 வருடங்களாகும். மூன்று வருடங்களின் பின் அமைச்சரினால் பொறுப்புச் சபையின் அங்கத்தவர்கள் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும்.

5. 2. கீழ்வருவன பொறுப்புச் சபையின் பொறுப்புக்களாகும்.

(அ) மாதத்துக்கொரு முறை அல்லது இருமுறைக்கு மேற்படாத வகையில் கூடி தேவையான முறையில் முகாமைத்துவத்துடன் தொடர்பான முடிவுகள் பொறுப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

(ஆ) ஊழியர்கள் நியமனம், பதவியுயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம், யாராவது ஊழியர் ஒருவர் ஒழுக்கத்துக்கு மாறான தவறுகள் ஏதாவது செய்திருந்தால் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம், ஒப்பந்த/அமய/பதில் அடிப்படையில் நியமனம் வழங்கும் அதிகாரம் என்பன இப்பொறுப்புச் சபைக்கு உரியனவாகும் ;

(இ) தொனிப்பொருள் பூங்காவுக்கு நிரந்தர, ஒப்பந்த/ அமய/ பதில் அடிப்படையில் நியமிக்கப்படும் எல்லா தரங்களையும் உடைய உத்தியோகத்தர்களின் சம்பளத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் இப்பொறுப்புச் சபைக்குரியதாகும் ;

(ஈ) அனைத்து ஊழியர்களினதும் ஒழுக்காற்று அதிகாரியாக இப்பொறுப்புச் சபை இயங்கும் ;

(உ) ஒப்பந்த அடிப்படையில் உள்ள சகல ஊழியர்களினதும் சேவைக்காலத்தை நீடிக்கும் அதிகாரம் இப்பொறுப்புச் சபைக்கு உரியதாகும்.

(ஊ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு பண்டைய கிராமத்தின் அமைப்பு நிர்மாணிக்கப்படும் வகையில் பண்டைய கிராமத்துக்குத் தேவையான அம்சங்களைச் சேர்க்கும் அதிகாரம் பொறுப்புச் சபைக்குரியதாகும் ;

(எ) அமைச்சரின் அனுமதியுடன் பொறுப்புச் சபையின் அங்கத்தவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்பவர்களின் கொடுப்பனவு பொறுப்புச் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும் ;

(ஏ) வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை தொனிப்பொருள் பூங்காவுக்கு வருவதனை முன்னேற்றுவதற்காக சுற்றுலா முகவர் நிலையங்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டுநர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவைத் தீர்மானிக்கும் அதிகாரம் பொறுப்புச் சபைக்குரியதாகும் ;

(ஐ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கான நடவடிக்கைகளை கண்டறிவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவற்கு பொறுப்புச் சபைக்கு உரிமை உண்டு ;

(ஒ) தொனிப்பொருள் பூங்காவை திறந்து வைக்கும் நேரம் மற்றும் ஊழியர்களின் கடமை நேரம் என்பன பொறுப்புச் சபையால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

பொறுப்புச் சபையின் தலைவர்.

(6) 6.1. தொனிப்பொருள் பூங்காவை நிறுவுகின்ற பொறுப்புச் சபையின் தலைவராக பிரதான அமைச்சரின் செயலாளர் செயற்படுவார். பொறுப்புச் சபையிற்கு தலைமை தாங்குதல் மற்றும் தொனிப்பொருள் பூங்காவை செயற்படுத்துவதற்காக நிறுவப்படுகின்ற பொறுப்புச் சபையின் தலைவர் என்ற வகையிலும் மற்றும் பிரதான கொள்கை நிர்ணயிப்பாளராக அவர் செயலாற்றுவார்.

6.2. தலைவர் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்காக அவர் தற்பொழுது பெறும் சம்பளத்தில் 1/3 வேலை பார்த்தலுக்கான கொடுப்பனவாக வழங்குவதற்கு பொறுப்புச் சபைக்கு முடியும்.

(7) 7.1. இதற்கு தொனிப்பொருள் பூங்காவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக பொறுப்புச் சபையின் செயலாளர் செயற்படுவார். பொறுப்புச் சபையின் கூட்ட அறிக்கைகளைக் கொண்டு நடாத்தல் அவரின் பொறுப்பாகும். — பொறுப்புச் சபையின் செயலாளர்.

(8) 8.1. தொனிப்பொருள் பூங்காவின் பொறுப்புச் சபையின் கூட்டத்துக்கு தலைவர் வருகை தராத சந்தர்ப்பத்தில் அங்கு சமுகமளித்துள்ள அங்கத்தவர்களில் ஒரு அங்கத்தவர் அத்தினத்தில் கூட்டத்தின் தலைவராக நியமித்துக்கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு அதிகாரம் காணப்படும். — பொறுப்புச் சபையின் தலைவர் இல்லாத சந்தர்ப்பங்களில் கூட்டத்தை நடத்துதல்.

(9) 9.1. பொறுப்புச் சபையின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 13 ஆகும். அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 07 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வருகை தந்துள்ள சந்தர்ப்பத்தில் பொறுப்புச் சபைக் கூட்டத்தின் நிறைவெண் முழுமையடைந்ததாகக் கருதப்படும். — நிறைவெண்.

(10) 10.1. அமைச்சருக்கு கீழ்வரும் அதிகாரங்கள் காணப்படும். — பொறுப்புச் சபை தொடர்பாக அமைச்சரின் அதிகாரங்கள்.

(அ) தமது விருப்பப்படி விசேட கூட்டக் கலந்துரையாடல்களுக்கு அங்கத்தவர்களை அழைக்கும் அதிகாரம் ;

(ஆ) பொறுப்புச் சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும்/நீக்கும் அதிகாரம் ;

(இ) அங்கத்தவர் ஒருவர் ஏதாவது ஊழல், ஒழுக்கத்துக்கு மாறான நடவடிக்கையொன்றுக்கு தொடர்புபடுவதாக தெரியவருமிடத்து அல்லது கூட்டத்தொடர் மூன்றுக்கு மேல் வருகை தராதவிடத்து அங்கத்துவத்திலிருந்து நீக்கும் அதிகாரம் ;

(ஈ) வங்கிக் கணக்கு, நிதித் தகவல்கள் மற்றும் நிறுவனத் தகவல்கள் கேட்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் கொடுப்பதற்கு பொறுப்புச் சபை கட்டுப்பட்டிருக்கும்.

(11) 11.1. பாராளுமன்ற அமைச்சரொருவர், மாகாண சபை அமைச்சரொருவர் அல்லது உள்ளூராட்சி சபையொன்றின் நகர முதல்வர்/தலைவரொருவருக்கு இச்சபையின் அங்கத்தவராக செயற்பட முடியாது. — பொறுப்புச் சபையின் அங்கத்தவராயிருப்பதற்கான தகுதியீனம்.

11.2. இலங்கை நீதிமன்றமொன்றில் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்ட ஒருவர் இங்கு அங்கத்தவராக செயற்படுவதற்கு உரிமையில்லை.

(12) 12.1. பொறுப்புச் சபைக்கு அமைச்சரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவரை நீக்கும் போது அல்லது இறந்தால் அல்லது வேறேதாவது ஒரு காரணத்தினால் நீக்கப்படவேண்டியேற்படின் அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு வேறொருவரை மிகுதிக் காலத்துக்கு நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. — பொறுப்புச் சபைக்கு புதிதாக ஒரு அங்கத்தவரை நியமித்தல்.

12.2. பொறுப்புச் சபைக்கு பிரதான செயலாளரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவரை நீக்கும் போது அல்லது இறந்தால் அல்லது வேறேதாவது ஒரு காரணத்தினால் நீக்கப்படவேண்டியேற்படின் அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு வேறொருவரை மிகுதிக் காலத்துக்கு நியமிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

12.3. ஏனைய அங்கத்தவர்கள் அரச சேவையிலிருந்து இளைப்பாறும் போது அல்லது இடமாற்றத்தின் போது அல்லது பதவியுயர்வின் போது அல்லது இராஜினாமாச் செய்யும் போது அல்லது இறந்தால் அவருக்குப் பதிலாக மாகாண சபையின் குறித்த பதவிக்கு வரும் பதில் உத்தியோகத்தரை பதவி முறைப்படி பொறுப்புச் சபைக்கு நியமிப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

*பொறுப்புச் சபையின் அங்கத் தவரொருவர் இராஜினாமாச் செய்தல்.*

(3) 13.1. பிரதான அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள் மற்றும் பிரதான செயலாளரால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர், ஆகிய மூவரில் ஒருவருக்கு தனது சுய விருப்பின் பெயரில் இராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்படின் ஐந்து மாத காலத்துக்குள் அமைச்சர், பிரதான செயலாளர் மற்றும் பொறுப்புச் சபையின் தலைவரை அறியப்படுத்தி விலக வேண்டும்.

*தொனிப்பொருள் பூங்காவின் கணக்கை நிறுவுதல்.*

(14)14.1. தொனிப்பொருள் பூங்காவுக்கு "பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா" என வழங்கப்படும் வங்கிக்கணக்கொன்றை அரச வங்கியொன்றில் தனியாக ஆரம்பித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

14.2. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் 3 ஆம் பகுதியின் ஏற்பாடுகளுக்கு "பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா" கணக்கு உள்ளடக்கப்படும்.

14.3. கீழ் குறிப்பிடப்படும் வருவாய்கள் "பின்னவல இபெரனிகம தொனிப்பொருள் பூங்கா" கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(அ) சபரகமுவ மாகாண சபை நிதியத்தினால் வழங்கப்படும் நிதி மற்றும் கொடைகள் ;

(ஆ) தொனிப்பொருள் பூங்காவால் ஈட்டப்படும் வருமானங்கள் ;

(இ) அரச அமைச்சொன்று/திணைக்களமொன்று அல்லது வேறொரு நிறுவனமொன்றின் மூலம் சட்டபூர்வமாக வழங்கப்பட்ட நிதி மற்றும் கொடைகள் ;

(ஈ) அரச சார்பற்ற அமைப்புக்கள், மக்கள், சுயேட்சை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களால் கிடைக்கும் பணம், பரிசில்கள் மற்றும் கொடைகள்.

*நிதி மற்றும் சொத்துக்களை உபயோகித்தல்.*

(15)15.1. தொனிப்பொருள் பூங்காவை நிறுவும் போது எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்கு அல்லது இலக்குகளை அடைவதற்கு செலவிடப்படுகின்ற அனைத்துச் செலவுகளும் கணக்கினால் செலுத்தப்பட வேண்டும்.

15.2. வாங்குதல், வழங்கல்கள், பரிசில்கள் அல்லது வரியொன்றைச் செலுத்தும் போது மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் நிதி ஒழுங்குகள்/நிதி விதிகளுக்கு ஏற்ப செலவிடுவதற்கு நிறுவப்படுகின்ற பொறுப்புச் சபைக்கு ஆற்றல் மற்றும் அதிகாரம் உள்ளது.

15.3. சபரகமுவ மாகாண சபையின் அல்லது பிரதான அமைச்சின் சுற்று நிருபங்களுக்கு மற்றும் சட்ட விதிகளுக்கு ஏற்ப ஏதாவதொரு சொத்தை விற்றல், அடகு வைத்தல் அல்லது குத்தகைக்கு விடுவதற்காக அமைச்சரின் அனுமதியிற்கு இணங்க நிறுவப்படும் பொறுப்புச் சபைக்கு அதிகாரம் வழங்கப்படும்.

*கணக்கு நிர்வாகம்.*

(16) 16.1. மாகாண சபையின் பிரதான அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கிணங்க அரச நிதி ஒழுங்குகளுக்கு ஏற்ப கணக்கை முறைப்படி நிர்வாகம் செய்ய வேண்டும்.

16.2. ஆரம்பிக்கப்படும் கணக்கின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக காணப்பட வேண்டும்.

16.3. பொறுப்புச் சபையினால் தொனிப்பொருள் பூங்காவின் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உட்பட ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாக ஒழுங்கான முறையில் கணக்கை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

16.4. அரச கூட்டுத்தாபனமொன்றின் கணக்கை கணக்காய்வு செய்வதுடன் தொடர்பான அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் சட்ட ஏற்பாடுகள் தொனிப்பொருள் பூங்காவின் கணக்கை கணக்காய்வு செய்வதுடன் தொடர்புபட வேண்டும்.

16.5. கணக்காய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னர் நடைபெறும் முதல் கூட்டத்தில் அவ்வறிக்கை பொறுப்புச் சபையில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(17) 17.1. காசோலையை ஒப்பமிடும் அதிகாரம், பொறுப்புச் சபையின் தலைவர் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி உட்பட நிதி உதவியாளர் அல்லது முகாமையாளருக்கு அளிக்கப்படும். காசோலையை கையொப்பமிடும் அதிகாரம்.

(18.) 18.1. பிரதான நிறைவேற்று அதிகாரியை நியமித்தல். ஆட்சேர்ப்பு.

(அ) தொனிப்பொருள் பூங்காவுக்காக அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க சபரகமுவ மாகாண சபையின் நிரந்தர சேவையில் உள்ள நாடளாவிய சேவையொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் இங்கு "பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக" நியமிக்கப்பட வேண்டும். இந் நியமனம் பொறுப்புச் சபையின் இணக்கத்துடன் செயலாளரினால் அமைச்சரின் அனுமதியுடன் நிறைவேற்ற வேண்டும். அதற்காக அவருக்கு வேலை செய்வதற்காக தற்பொழுது கிடைக்கும் சம்பளத்தில் 1/3 பங்கு வேலைபார்த்ததற்கான கொடுப்பனவாக வழங்க பொறுப்புச் சபைக்கு இயலுமானதாகும் ;

- இல்லாவிடின்,

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படாதவிடத்து முழு நேர பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரை அமைச்சரினால் நியமிக்க முடியும். இதற்காக சம்பளம், படிகளை பொறுப்புச் சபையினால் அமைச்சரின் அனுமதியுடன் தீர்மானிக்க வேண்டும் ;

(இ) இந்த பிரதான நிறைவேற்று அதிகாரியை முழு நேரமும் நியமிப்பதற்குத் தேவையான தகுதிகள் பொறுப்புச் சபையினால் இனங்காணப்பட வேண்டும் ;

(ஈ) அமைச்சின் ஒரு அலகாக செயற்படும் தொனிப்பொருள் பூங்காவின் பொது நிர்வாகத்தைக் கொண்டு நடத்துதல், நிதி நிர்வாகம், பணிக்குழாத்தின் நிர்வாகம் மற்றும் ஆக்கத்திறன் அடிப்படையில் இலாபகரமான நிறுவனமாக பொறுப்புச் சபையின் ஆலோசனை மற்றும் அனுமதியுடன் தொனிப்பொருள் பூங்காவை நடைமுறைப்படுத்தல் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

18.2. தொனிப்பொருள் பூங்காவுக்கு கீழ்வரும் அடிப்படையில் அமைந்த நிரந்தர/அமய/பதில்/ஒப்பந்த பணிக்குழாமொன்றை சேர்த்துக்கொள்வதற்கு பொறுப்புச் சபைக்கு அதிகாரம் வழங்கப்படும். அவ்வவ் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்/ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் நியமித்துக்கொள்வதுடன் தொடர்பான தகுதிகள் பொறுப்புச் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(அ) முகாமையாளர் ;

(ஆ) நிதி உதவியாளர்;

(இ) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வழிகாட்டுநர்கள் ;

(ஈ) பிரவேசச் சீட்டு கூடத்துக்கான காசாளர்கள் ;

(உ) பராமரிப்புத் தொழிலாளர்கள் ;

(ஊ) காவலாளர்கள் ;

(எ) வாகனத் தரிப்பிடங்களில் டிக்கெட் வழங்குனர்கள்.

18.3. தொனிப்பொருள் பூங்காவுக்குச் சேவை அவசியத்தின் காரணத்தில் வேலை செய்வதற்காக அமய/ பதில்/ ஒப்பந்த அடிப்படையில் பணிக்குழாத்துக்கு மேலதிகமாக ஊழியர்களை நியமிக்க பொறுப்புச் சபைக்கு அதிகாரம் உண்டு.

18.4. பணிக்குழாத்தின் அந்தந்த பதவிகளுக்கு நியமித்துக்கொண்ட ஒப்பந்த/ அமய/ பதில் காலங்களை நீடிப்பதற்கு பொறுப்புச் சபைக்கு அதிகாரமுண்டு.

18.5. அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து ஊழியர்களும் ஒரு வருடத்தின் பின்னர் நிரந்தர பணிக்குழாத்துக்கு இணைத்துக்கொள்ள பொறுப்புச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(அ) இங்கு முறைப்படி நேர்முகப்பரீட்சை நடாத்தி தொழில் ஆற்றுகை திறமை காட்டுகின்ற தகைமைபெற்ற ஊழியர்கள் மட்டும் நிரந்தர பணிக்குழாத்தில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் ;

(ஆ) ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் வைத்துக்கொள்ளும் காலத்தை நீடிக்கும் உரிமை பொறுப்புச்சபைக்கு உள்ளது ;

(இ) இவ் ஊழியர்களை நிரந்தரப்படுத்திய பின்னர் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதேவேளை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு ஏற்ப செய்ய வேண்டிய கொடுப்பனவுகளை பொறுப்புச் சபை செய்ய வேண்டும் ;

(ஈ) இவ் அனைத்து ஊழியர்களையும் நிரந்தரப்படுத்தும்போது சம்பள அளவைத் தயாரித்தல், பதவியுயர்வு ஒழுங்குமுறையொன்றை தயாரித்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பான முடிவுகளை எடுத்தல் பொறுப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

(உ) சேவை அவசியத்தின் அடிப்படையில் தொனிப்பொருள் பூங்காவின் பணிக்குழாத்தின் பதவிகள் மற்றும் எண்ணிக்கை சீர்திருத்தம் செய்யும் உரிமை பொறுப்புச் சபைக்கு உரியதாகும் ;

(ஊ) ஊழியர்களுக்குரிய கடமைகளைத் தீர்மானிக்கும் உரிமை பொறுப்புச் சபைக்கு உண்டு ;

(எ) இவ்வாறு நியமிக்கப்படுகின்ற அனைத்து ஊழியர்களும் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களாக கருதப்பட வேண்டும் ;

(ஏ) நியமிக்கப்படுகின்ற அனைத்து ஊழியர்களும் தாபனவிதிக் கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் சபரகமுவ மாகாண நிதி ஒழுங்கு மற்றும் காலத்துக்குகாலம் செய்யப்படுகின்ற சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், நியதிச் சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் ;

(ஐ) அவர்களால் நன்னிலையில் செய்யப்படுகின்ற அல்லது வேண்டுமென்று செய்யாத செயல்கள் தொடர்பாக நிகழும் நட்டங்கள் அல்லது இழப்புக்கள் அல்லது இழப்புகளை மீட்க தீர்மானங்கள் எடுப்பதற்கு பொறுப்புச் சபைக்கு அதிகாரமுண்டு.

காட்சிப்படுத்தல்கள்.

(19)19.1. குறித்த நிர்மானங்கள் பாரம்பரியமாகக் காட்டப்படுகின்ற வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு பண்டைய கிராமமொன்றின் உரிமைகள் தொடர்பான அறிவை வழங்குதல், அதனை நேரடியாகப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்தல் மற்றும் பாரம்பரியப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துபவர்களின் பொறுப்பாகும்.

19.2. அந்தந்த நிர்மானங்களுக்கேற்ப காட்சிப்படுத்துபவர்களின் பொறுப்பிற்கேற்ப அவர்களுக்கு வருமானம் கிடைக்கின்றதா இல்லையா என்பதைத் தீர்மானித்தலை பொறுப்புச்சபை மேற்கொள்ள வேண்டும்.

19.3. இந்நிர்மாணங்களில் காட்சிப்படுத்துபவர்களுக்கு பொறுப்புச் சபையினால் இனங்காணப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

19.4. காட்சிப்படுத்துபவர்களை நியமிப்பதற்கு பொறுப்புச் சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் அவர்களின் தொழில் ஆற்றுகை மதிப்பீட்டிற்கு இணங்க ஒப்பந்தக் காலம் வருடாந்தம் நீடிக்கப்படுகின்றதா இல்லையா என்பதை பொறுப்புச் சபை முடிவு செய்ய வேண்டும்.

(20) 20.1. தொனிப்பொருள் பூங்காவுக்கு திறந்தவெளி அரங்கொன்று உள்ளடக்கப்படும். *திறந்த வெளி அரங்கில் பங்கேற்பவர்கள்.*

(அ) திறந்தவெளி அரங்கில் நாடகம்/நடனம் ஆடுவதற்காக பொறுப்புச் சபையினால் குறிப்பிட்ட காலத்துக்கு கலைக்கழகமொன்று இனங்கண்டுகொள்ள வேண்டும் ;

(ஆ) இதில் கலைக்கழகத்தை இனங்கண்டுகொள்ளும் போது முதலாவதாக ரம்புக்கனை நகரிலுள்ள கலைக்கழகமொன்றுக்கும், இரண்டாவதாக கேகாலை மாவட்டத்திலுள்ள கலைக்கழகமொன்றுக்கும், மூன்றாவதாக இரத்தினபுரி மாவட்ட கலைக்கழகங்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் ;

(இ) இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நடனங்களை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் ஒரு பகுதியை கலைக் கழகத்துக்கு வழங்க பொறுப்புச் சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் குறிப்பிட்ட வீதம் மற்றும் நடன நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு வரும் சுற்றுலாப்பயணிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணத்தை பொறுப்புச்சபை தீர்மானம் செய்ய வேண்டும் ;

(ஈ) கொஹொம் கங்காரிய, தகஅட சந்நிய, சபரகமுவ நடனம், வெஸ் நடனம், பண்டைய கிராமத்தின் யாக முறைகள், பலி தொவில் தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறியப்படுத்துதல் ;

(உ) இந்நடனத்தை ஆட குறிப்பிட்ட கால எல்லையை இனங்கண்டுகொள்ள வேண்டும் ;

(ஊ) கலைக்கழகங்கள் மற்றும் கலைஞர்கள் இனங்காணல், அவர்களின் ஒப்பந்த காலத்தை நிர்ணயம் செய்தல் அல்லது பங்கேற்புக் கொடுப்பனவை பொறுப்புச் சபையால் தீர்மானிக்க முடியும்.

(21) 21.1. தொனிப்பொருள் பூங்காவின் திறந்தவெளி அரங்கை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அறவிடப்படும் நாட்கூலியை அல்லது கட்டணத்தை பொறுப்புச்சபை தீர்மானிக்க முடியும். திறந்த வெளி அரங்கு நடனம், கண்காட்சி மற்றும் சுதேசத்தன்மையை வெளிக்காட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்க பொறுப்புச் சபைக்கு இயலுமானதாகும். *திறந்த வெளி அரங்கை குத்தகைக்கு வழங்குதல்.*

(22) 22.1. தொனிப்பொருள் கிராமத்தின் வெளிவாயிலுக்கு அருகில் உள்ள கண்காட்சிக்கூடம் பொறுப்புச்சபையினால் சரியான முறையில் இனங்காணப்பட்டு அரச அல்லது தனியார்த் துறை நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். *கண்காட்சிக் கூடத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல்.*

22.2. தொனிப்பொருள் பூங்காவுக்கே உரித்தாக கலைப்பொருட்கள் விற்பனை, சபரகமுவ மாகாண கலைஞர்களின் ஆக்கப்பொருள் விற்பனை மற்றும் தேசிய ரீதியில் முக்கியமான கலைப்படைப்புக்களை உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தலுக்காக இக் கண்காட்சிக்கூடத்தை உபயோகிக்க வேண்டும்.

22.3. எவ்வேளையிலும் செயற்கை அல்லது பாரம்பரியமற்ற உற்பத்திகளை அறிமுகப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ இக்கூடத்தினுள் இடமளிக்கக்கூடாது.

22.4. கண்காட்சிக்கூடத்துக்கு அறவிடப்படும் குத்தகைக்கூலியை பொறுப்புச் சபை தீர்மானிக்க வேண்டும்.

*நிகழ்ச்சி முகாமைத்துவம்.*

*(23)23.1.* தொனிப்பொருள் கிராமத்தினை உபயோகித்து புகைப்படம் எடுத்தல் மற்றும் தொடர்படப்பிடிப்புகளை எடுப்பதை வியாபார மட்டத்தில் செய்பவர்களிடமிருந்து பொறுப்புச் சபையினால் இனங்கண்டு கட்டணம் அறவிட வேண்டும்.

*புதிய பகுதிகளை உட்படுத்துதல்.*

*(24) 24.1.* அமைச்சரின் அனுமதியின் கீழ் தொனிப்பொருள் கிராமத்தின் ஆரம்பக் குறிக்கோள்களுக்கு எவ்விதப் பாதிப்புமின்றி தேசிய மற்றும் பண்டைய அம்சங்கள் உட்பட புதிய விடயங்களை சேர்த்துக்கொள்ள பொறுப்புச் சபையினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

*ஆரம்ப நிதி.*

*(25) 25.1.* வருமான உருவாக்க மட்டத்தை அடைந்து கொள்ளும் வரை தொனிப்பொருள் பூங்காவை கொண்டு நடத்துவதற்காக வருடமொன்றுக்கு செலவிடும் தொகையை பொறுப்புச் சபையினால் தீர்மானிக்கப்படுவதுடன் நிதி ஒதுக்கீடுகள் சபரகமுவ மாகாண சபை நிதியத்தினால் தொனிப்பொருள் பூங்காவுக்கு மீண்டும் செலுத்தாத அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்க முடியும்.

*25.2* இம்மூலதனத்தை வழங்கலை கௌரவ அமைச்சரவையின் அனுமதியுடன் நடத்த வேண்டும்.

*25.3* தொனிப்பொருள் பூங்காவின் வருமான உருவாக்கல் செயற்பாடு இழப்போ அல்லது நிதி நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் 6 மாத காலத்துக்குப் போதுமான வகையில் சம்பளம் மற்றும் கொண்டு நடத்தல் செலவுகளுக்காக சபரகமுவ மாகாண நிதியத்தினால் சமமான 10 தவணைகளில் செலுத்தி முடிக்க வேண்டிய நிதியொன்றை வட்டியின்றி வழங்க சபரகமுவ மாகாண சபை நடவடிக்கை எடுக்கமுடியும்.

*இடைக்கால ஏற்பாடுகள்.*

*(26) 26.1.* கருத்திட்டத்தை ஆரம்பிக்கும் தினத்திலிருந்து ஒரு வருட காலத்துக்கு அங்குள்ள பணிக்குழாமின் பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கும் வரை சபரகமுவ மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களை/ஊழியர்களை இணைப்புச் செய்வதற்கு சபரகமுவ மாகாண பிரதான செயலாளரால் நடவடிக்கை எடுக்க முடியும்.

*ஏதாவது தவறுகளின் போது சட்ட முறையாக செல்லுபடியாதல்.*

*(27) 27.1.* இந்நியதிச் சட்டம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று பிரதிகளில் தயாரிக்கப்படுவதுடன் ஏதாவதொரு சர்ச்சை ஏற்படின் அது தொடர்பாக சரியான கருத்து வெளிப்பாட்டை இனங்கண்டுகொள்ள வேண்டியது சிங்களப் பிரதியிலிருந்தாகும்.

*3- 718*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.